# **<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.141/2023**

Date: 12.02.2025.

வா.சா. 1 - திரு. ஆன்றோ ஸ்டானிஸ் ஜுன்.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 21.09.2022 அன்று நானும் எனது தூரத்து உறவுக்காரரான 2ம் வாதி அபிஷேக் ஆகிய இருவரும் வேலைக்காக ரூ.9,00,000/- பிரதிவாதியிடம் கொடுத்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். இதைத் தவிர நானும் 2ம் வாதியும் பிரதிவாதியிடம் வேறு பணம் எதுவும் கொடுக்கவில்லை. ஆனால் பிராதில் ரூ.4,40,000/- நாங்கள் இருவரும் கடன் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளதில் எது சரியான விபரம் என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. பின்னிட்டு சாட்சி ரூ.9,00,000/- கொடுத்தது தான் சரி என்று கூறுகிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமானப் பத்திரத்தில் நாங்கள் இருவரும் 21.09.2022ல் பிரதிவாதியிடம் ரூ.9,00,000/- கொடுத்ததாக குறிப்பிடவில்லை. இந்த நிலையில் ரூ.4,40,000/- வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தனியாக கொடுத்ததாக துலங்காது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 வங்கிக் கணக்கின் படி 21.09.2022அன்று நான் ரூ.3,00,000/- ம், 2ம் வாதி ரூ.1,45,000/-ம் கொடுத்ததாக துலங்காது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 6ம் பத்தியில், 1ம் வாதியால் 31.01.2023 ம் தேதியில் அடமானப் பத்திரம் எழுதப்படுவதற்கு முன்பு பிரதிவாதிக்கு கொடுத்த தொகை ரூ.3,00,000/- என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். அதில் அவ்வாறு 31.01.2023 க்கு முன்பு பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூ.5,00,000/- என்று நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். 2வது வாதியால் 31.01.2023 அடமானப் பத்திரம் எழுதப்படுவதற்கு முன்பு பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூ.1,45,000/- என்று தான் குறிப்பிட்டிருக்கிறேன் என்றாலும், ரூ.4,00,000/- என்று நான் குறிப்பிடவில்லை என்றாலும், சரிதான். இவ்வாறு என்னுடைய பிராதின் படி 31.01.2023 க்கு முன்பு நாங்கள் இருவரும் ரூ.9,00,000/- கொடுத்ததாக துலங்காது என்றால், சரிதான். பிரதிவாதி எனக்கு வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றியது பற்றி காவல் துறையில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது பிராதிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ குறிப்பிட்டுள்ளது போல பிரதிவாதிக்கு நானும்

2 வது வாதியும் கடனாக எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அதே போல் எங்கள் இருவருக்கும், பிரதிவாதிக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 வங்கிக் கணக்குப் பட்டியல், பிரதிவாதியின் மனைவியினுடையது ஆகும். அவருடைய பெயர் எனக்கு நினைவில் இல்லை. உண்மை விபரங்களை நான் மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வா.சா.ஆ.1 ன் படி எங்களுக்கும் பிரதிவாதிக்கும் எந்தவிதமான கொடுக்கல் வாங்கலும் நடக்கவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.